all Government loans and land revenue dues for a period of six months in the areas where the Collector is satisfied after a personal assessment that owing to failure of rains, acute conditions prevail and warrant such postponement. The Collector has also been asked to send immediately to the Government particulars of places where the grant of this concession has become necessary.

(ஆ) வட ஆற்காடு, மதுரை, கோவை, திருச்சி, இராமநாதபுரம், தஞ்சை, செங்கல்பட்டு, நெல்லை மாவட்டங்களில் பருவமழையின்மையும், அரசு கடன் வசூலை ஒற்றிவைத்தலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. இல. பலராமன், திரு. எ. சி. நரசிம்மன், திரு. என். வரதராஜன், திரு. கே. என் குமாரசாமி, திரு. என். மருதாசலம், திரு. சி. கந்தசாமி கவுண்டர், திரு. கே. என். சாமிநாதன், திரு. கரு சீமைச்சாமி, திரு. எ. அ. சுப்பராஜா, திரு. பி. எஸ். தனுஷ்கோடி, திரு. கொளத்தூர் கோதண்டம், திரு. என். துரைபாண்டியன், திரு. நா. சௌந்தரபாண்டியன் ஆகியோர் ஒரே பொருளைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் படிப்பதற்குப் பதிலாக, நானே இந்த அவைக்கு அதைப் படித்துவிடுகிறேன்.

"வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கல்பட்டு, மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவமழை தவறியதால் மேற்படி மாவட்டங்களில் அரசாங்கக் கடன்களை ஒத்தி வைக்க வேண்டும்".

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இம் மாநிலத்தின் சில பகுதிகளில், அதாவது, வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கல்பட்டு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கொடிய வறட்சி நிலவுவதாக அரசு கருதுகிறது. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகளின் மேல் அத்தகைய பகுதிகளில் அரசுக்குச் சேரவேண்டிய நிலுவைகளை மெதுவாக வசூலிக்கும் கொள்கையை பின்பற்றும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து குறிப்பிட்ட அறிக்கை எதுவும் வரப் பெறவிடினும், அவர்கள் பொறுப்பில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளில் மழையின்மை காரணமாக மிகவும் மோசமான வறட்சி நிலை இருப்பதாகத் தாங்கள் சரிவர அறிந்த பின் இதைப் போன்ற கொள்கையைப் பின்பற்றவும், ஏனைய மாவட்ட ஆட்சித் தலைவர்களை அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

அத்தகைய பகுதிகளைக் கொண்ட பட்டியல் ஒன்றை உடனடியாக அரசுக்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(இ) வட ஆற்காடு, கோவை மாவட்டங்களில் பருவமழையின்மையும், துயர் தணிப்புப் பணிகள் துவங்க வேண்டியதன் அவசியமும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"வட ஆற்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் பருவ மழை தவறியதால் அப்பகுதிகளில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்".

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு: 1968, 1969 ஆண்டுகளில் இருந்த வறட்சிச் சூழ்நிலையில், இம் மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியென்று அறிவிக்கப் பட்டது. பல்வேறு துயர் தணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நகர்ப்புறத்திலும், கிராமப் பகுதிகளிலும் குடிநீர் வசதியை மேம்படுத்த முதலிடம் கொடுக்கப்பட்டது. இதற்கென இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபாய் 2.87 கோடியாகும். இது இம் மாநிலத்திலேயே ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மிக உயரிய தொகையாகும். துயர் தணிப்புக்காக மொத்தம் ரூ 3·07 கோடி செலவிடப்பட்டது. மேலும், கூடுதலாக ஒதுக்கப்பட்ட தொகை இதில் சேராது. இப்பகுதியைப் பார்வை யிட்ட வருவாய்த்துறை செயலாளர் அறிக்கைக் கிடைக்கப் பெற்று ஆய்வு செய்யப்பட்டதும் ஒப்புக்கொண்ட வேலைகளையும் முடிக்கப்பெறாத வேலைகளை யும், முடிப்பதற்குக் கூடுதல் தொகை செலவழிக்கப்படும்.

திருப்பத்தூர், குடியாத்தம் வட்டங்களும், வாணியம்பாடி துணை வட்டமும் அடங்கிய குறிப்பாக திருப்பத்தூர் கோட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமைகளைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை ஒன்று இப்போது அனுப்பியுள்ளார். அவர் பாசன ஏரிகளும், கிணறு களும் மிக விரைவில் வறண்டு வருவதாகவும், குடிநீர்ப் பற்றாக்குறையும் உணரப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். அந்தத் துயரைத் தணிப்பதற் காக திருப்பத்தூர் கோட்டத்தில் தகுந்த துயர் தணிப்பு ஏற்பாடுகளை மேற் கொள்ள ரூ. 7 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும், அவர் இம்மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் நிலவும் நிலைமை யைப்பற்றி மேற்கொண்டும் ஒரு அறிக்கை அனுப்பி வைப்பதாக உறுதி கூறினார். மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற் குறிப்புகளின் மேல் இது குறித்து வருவாய்த்துறை வாரியத்தின் குறிப்புரை கிடைக்கப்பெற்று அது ஆய்வு செய்யப்பட்டவுடன் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

கோயம்புத்தூர் : இம்மாவட்டம் முழுவதும் 1969-ல் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியென அறிவிக்கப்பட்டது. தொழிலாளருக்கு போதிய வேலை கொடுக்கும் நோக்கத்துடனேயே துயர் தணிப்புப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. இம்மாநிலத்தில் மிக உயர்ந்த தொகை பெறும் 4-வது மாவட்டமாக உள்ள இம்மாவட்டத்திற்கு, ரூ. 2·19 கோடி ஒதுக்கப்பட்ட தொகையில் துயர் தணிப்பு பணிகளுக்காக ரூ. 2·38 கோடி செல வழிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் குடிநீர் வழங்கும் பணிக்காக வெள்ளக் கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூ 3·41 இலட்சம் ஒதுக்கப் பட்டது. ஒப்புக்கொண்ட துயர் தணிப்பு பணிகள் யாவும் மக்கள் நலனைக் கருதி முடிக்கப்பெறும் வகையில், அரசு அண்மையில் இம் மாவட்டத்திற்கு ரூ. 9·41 லட்சம் அனுமதித்தது. முடிக்கப்பெறாத வேலை களுக்காக கூடுதல் நிதி வேண்டி, செயற் குறிப்புகளை அனுப்பி வைக்கையில், மாவட்ட ஆட்சித் தலைவர், துயர் தணிப்புப் பணிகள் தொடங்குவதற்கு அவசியமான வறட்சி நிலை அண்மையில் எதுவும் ஏற்பட்டதாகத் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அரசு இந்த நிலைமை குறித்து உன்னிப்பாக கவனித்து வருகிறது. அத்தகைய அறிக்கை ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து கிடைக்கும் போது, மக்களைப் பாதிப்பதற்குக் காரணமாயுள்ள, துயருறு நிலைமைகளைத் தணிக்கைக்கூடிய தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(5) அறிவிப்புகள்

(அ) சட்டப்பேரவை சுதந்திராக் கட்சியின் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டதுபற்றி அக்கட்சித் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டசபை சுதந்திராக் கட்சித் தலைவரிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.